# சைவ சமயம் வளர்த்த முத்தமிழ்

21

**ம.ஸ்வர்ணல்கா, ச.விஜய தர்ஷினி & வீ. கோபிநாத்,**
**உளவியல் துறை**
**பூ.சா.கோ. அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி கோவை**

**ஆய்வு நோக்கம்:**

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனப்படும் முத்தமிழின் வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்

**ஆய்வு சுருக்கம்:-**

**“சமயம் தமிழை அலங்கரித்ததும், சமயத்தை தமிழ் அலங்கரிந்ததும் தமிழின் தித்திப்பான வரலாறு”.**

மனிதனின் வாழ்வில் உயர்ந்த இலட்சியமாக கருதப்படும் முக்தியை அடைய சமயங்கள் உதவுவதால் மனிதன் சமயத்தை நாடுகிறான்.பல்வேறு சமயங்கள் இருப்பினும் அவற்றின் நோக்கம் மனிதனை நல்வழிபடுத்துவதே ஆகும்.குறுகிய காலத்தில், சமண பௌத்த சமயங்கள் மக்கள் மத்தியில் மிக சிறப்பாக வளர்ந்தன. சடங்கியலை வலியுறுத்திய வேதமதத்திற்கு எதிராக அச்சமயங்கள் வளர்ந்தது. சாமான்ய மக்கள் பேசிய "பாலி" மொழியை கையாண்டதே அச்சமயங்களின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. தற்காலத்தில் பாலி மொழி புழக்கத்தில் உள்ளதா? என்று சிந்தித்தால், அது கேள்விக்குறியே. இலக்கியங்களும், சமண-பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்களும் அம்மொழியை பாராட்டவில்லை, வழிப்பாட்டில் அம்மொழியின் பயன்பாடில்லை.அச்சமயம் மொழியை கைவிட்டுவிட்டது என்றும் கூறலாம். இதுவே அம்மொழி தற்போது புழக்கத்தில் இல்லாததன் காரணமாகும் ஆனால் தமிழைக் கையாண்ட சைவ சமயத்தோர் தமிழை கைவிடவில்லை.தமிழகத்தின் சமய வழிபாட்டு முறைகளில் சைவ சமயம் இன்றியமையாத ஒன்றாகும்.தனக்கென தனிப்பட்ட பல்வேறு இலக்கியங்களை கொண்டுள்ளது.சைவசமயம் தன்னுடைய சமயம் சார்ந்ததும்,

ஆலயங்களில் வழிபாட்டு ஒழுங்குகள் சார்ந்தும் தமிழின் முத்தமிழான இயல், இசை, நாடகம் என்னும்- தனிப்பட்ட பிரிவின் கீழ் எவ்வாறு தமிழை வளர்த்தது என்றும் தமிழரின் தொல் நாகரீகம் எவ்வண்ணமும் மாறாது அந்த மொழியையும், நாகரீகத்தையும் இன்றைய காலகட்டம் வரை எவ்வாறு சைவ ஆலயங்களும், ஆதீனங்களும் கடத்தி வந்திருக்கின்றன என்றும் இக்கட்டுரையில் காணலாம்.

**முன்னுரை:**

உலகில் தோன்றி நிலை பெற்றிருக்கக் கூடிய பல சமயங்களில் சைவ சமயமும் ஒன்று.இது சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்று வழிபடும் சமயம்.சிவம் என்ற சொல் பல நூற்றாண்டு திரிபு சொல்லாக மாறி சைவம் என்று மாறியதாகக் கூறப்படுகிறது .சைவம் என்ற சொல் உணவியலை மட்டும் குறிக்கும் சொல் என பலரும் தவறாக கருதுகின்றனர்,அது சைவ சமயத்தை குறிக்கும் சொல் என்பது குறிப்பிடத்தக்கது. சைவ சமயத்தை பரப்பிய சான்றோர்கள் தமது கருத்துக்களை தமிழ் மொழி

கொண்டு பரப்பியதால் சிவபக்தியோடு சேர்ந்து தமிழும் வளர்ச்சி பெற்றது. தமிழை கடவுளுக்கு நிகராக சைவர்கள் மதித்துள்ளனர் என்பதற்கு "இறைவன் தமிழை ஒத்தவன்" என்று தம்பிரான் தோழர் சுந்தரர் கூறியது சான்றாகும். சைவ சமய வளர்ச்சியில் தமிழ் மொழியின் பங்கு ஏராளம் என்பதை அனைவரும் அறிவர். அதேபோல் தமிழ் வளர்ச்சிக்கு சைவ சமயமும், சைவ ஆதீனங்களும் ஆற்றிய தொண்டுகள் பல உள்ளன. அவற்றை பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**இயற்றமிழும் சைவ சமயமும்;**

நோய் தீர்க்கும் திருமந்திரம்

சைவ சமய நூல்களில் வாழ்வியல் குறித்த பல கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.திருமந்திரம் என்னும் திருமூலர் எழுதிய நூல் அதற்கு உதாரணம். திருமந்திரம் சைவ சமயத்திற்கு மற்றும் உரிய ஒரு சமய நூலாக அமையாது. உலக மக்களுக்கு எல்லாம் ஆன்மிகத்தையும், மருத்துவத்தையும் எடுத்துரைக்கும் ஒரு பொது நூலாகவே அமைகிறது.இந்நூலில் பல அறிவியல் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன என பல ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.அத்தகைய ஆய்வாளர்களுள் ஒருவரான திரு. சுந்தரவடிவேல் பாலசுப்பிரமணியனின் கண்டுபிடிப்பு,அமெரிக்காவிலும் நமது தமிழின் பெருமையை நிலைநாட்டியுள்ளது. திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ள 568 வது பாடல் பிராணாயாமம் பற்றி கூறுகிறது.

**ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்**
**ஆறுதல் கும்பகம் அறுபத்து நால்அதில்**
**ஊறுதல் முப்பத் திரண்ட திரேசகம்**
**மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே .**

இப்பாடலில் பிரணாயாமம் செய்வதற்கான வழிமுறையை திருமூலர் கூறியுள்ளார்.இதனை சரியாக செய்வதன் மூலம் உடல் தூய்மை பெற்று ஆற்றல் மிகுந்த நற்பண்புகள் கைகூடும் என திருமூலர் சுட்டியுள்ளார். இப்பாடலை அடிப்படையாகக் கொண்டு திரு.சுந்தரவடிவேல் பாலசுப்ரமணியன் அமெரிக்காவில் ஆய்வு மேற்கொண்டு மருத்துவத்துறையில் சவாலாகவே இருக்கும் பல பிரச்சனைகளுக்கு திருமூலரின் பாடலில் இடம்பெற்றுள்ள மூச்சுப் பயிற்சி தீர்வளிக்கிறது என கண்டறிந்து வெளியிட்டுள்ளார். இதன் மூலம் தமிழர்களின் பண்டைய இலக்கியங்கள் இக்கால வாழ்வியலுக்கும், எந்நாட்டுச் சூழலிலும் பயன்படும் என்று தன் ஆய்வின் மூலம் தெளிவுப்படுத்தியுள்ளார் திரு.சுந்தரவடிவேல் பாலசுப்ரமணியன்.

*குடும்ப வாழ்வியல்*

சைவ சமய வாழ்வியலை எளிமையாக்கினார் சம்பந்தர்.

**“மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே”**

இதன் பொருள் உயிர்கள் இப்பூவுலகில் வளமோடு இன்ப வாழ்வு வாழலாம். தினந்தோறும் இறைவனை நினைத்து வழிபட யாதொரு குறையுமில்லாத முக்தி இன்பமும் பெறலாம்.இத்தகைய பேற்றினை அழிக்கும் பொருட்டே கண்ணுக்கு இனிய நல்ல வளத்தை உடைய கழுமலம் என்னும் ஊரில் பெண்ணின் நல்லாள் ஆகிய உமா தேவியோடு பெருந்தகை ஆகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றான். இப்பாடல் தமிழர்களின் குடும்ப வாழ்வியல் குறித்து கூறுகிறது. இன்றைக்கும் அனைத்து திருமணங்களிலும் இப்பாடலே ஆசிபாடலாக சைவர்கள் வீட்டில் விளங்கி வருகிறது. திருமண அழைப்பிதலிலும் இப்பாடல் அச்சடிக்கப்பட்டிருப்பதை காணலாம். இதன் மூலம் வாழ்வியல் சடங்குகளில் தமிழ் இலக்கியங்கள் இன்றும் தொடர்ந்து வாழ்ந்துவரும்படி செய்த பெருமை சைவசமயத்தையே சாரும்.

**சைவ சமயமும் தமிழிசையும்;**

*கர்நாடகயிசையும் தமிழியிசையும்*

முத்தமிழில் இசை என்பது தமிழிசையை குறிக்கிறது. இன்று தழைத்தோங்கி நிற்கும் கர்நாடக இசையே தமிழிசையின் மறு வடிவமாகும்.கர்நாடக இசை மரபுகளையும் தமிழிசை மரபுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் அவை ஒன்றியிருப்பதை நாம் அறியலாம். கர்நாடக இசையில் பயன்படும் இசை வழக்குகளும், இசை மரபுகளும் தமிழிசை மரபுகளை புதிதாக பெயரிட்டு காலமாற்றத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்தது போன்றே உள்ளன .இதன் மூலம் கர்நாடக இசைக்கு முன்னோடியாக விளங்குவது நமது தமிழிசையே என்று கூறலாம். சாரங்கதேவர் வடமொழியில் இயற்றிய "சங்கீத ரத்னாகரம்" என்னும் நூலின் இசையமைப்பு “தேவாரம்” "திவ்யப் பிரபந்தம்" ஆகிய நூல்களில் உள்ள தமிழிசை பண்ணமைப்பு முறையை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது.இதன் மூலம் நமது தமிழிசையை வட நாடுகளில் அறிமுகப்படுத்திய பெருமை சைவ நூல்களான 'தேவாரம்' 'திவ்யப்பிரபந்தம்' ஆகிய நூல்களையே சேரும்.

*சம்பந்தரும் தமிழ் இசையும்*

பக்தி இலக்கிய காலத்தில் இசைத்தமிழுக்கு முன்னோடியாய் விளங்கியவை சைவத்திருமுறைகள். மிகுதியான பண்களைப் பயன்படுத்தி பதிகம் பாடிய திருஞானசம்பந்தர் பல்வேறு புதுமைகளை கையாண்டு,சிறப்பான பாடல்களை இயற்றி தமது தமிழ் புலமையை உலகிற்கு வெளிப்படுத்தினார் என்றே கூறலாம். தனது இன்னிசை மூலம் தமிழை பரப்புவதனால் சம்பந்தரை,சுந்தரமூர்த்தி சுவாமிகள்,தன் தேவார பாடல் புகழாரத்தில் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என சூட்டியுள்ளார்.சம்பந்தர் தமிழையும் தமிழிசையும் எவ்வளவு ஆழமாக ஆராய்ந்துணர்ந்துள்ளார் என்பது அவர் அருளிய திருமாலைமாற்று பதிகம்,திருஎழுகூற்றிகை, யாழ்முரிப்பண் பாடல் போன்ற படைப்புகளில் புலப்படும்.

*திருமாலைமாற்று*

இது சீர்காழி இறைவர் மீது பாடியது.மாலைமாற்று என்பது பாடலினை முன்னிருந்து படிப்பினும் மாற்றிப் பின்னிருந்து முன் படிப்பினும் ஒன்று போல் வருவது.(மாலை =வரிசை ;மாற்று= மாறுதலை

உடையது) பாடுவதற்கு மிகவும் கடினமாகக் கருதப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் **'PALINDROME'** என கூறுவர். இதன் அடிப்படையில் எளிய பாடல் அமைப்பதே கடினம் ஆனால் சம்பந்தர் தமிழில் உள்ள யாப்பிலக்கியத்திற்கேற்ப 11 பாடல்கள் கொண்டதொரு திருப்பதிகத்தையே அருளியிருக்கிறார்.

**"யாமாமாநீ யாமாமா யாழீக்காம காணாகா**
**காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா".**

*திருவெழுகூற்றிருக்கை*

ஞானசம்பந்தர் அருளிய "ஒருரு ஆயினை" என்று தொடங்கும் ஏழுகூற்றிருக்கைப் பதிகம் முதல் திருமுறையின் 128 ஆவது பதிகமாக திகழ்கிறது.இது (1,2,3)(1,2,3,2,1) என்று ஒன்று முதல் ஏழு வரை படிப்படியாக,ஒன்று ஒன்றாக,ஏற்றியும் இறக்கியும்,ஏழு கூறுகளிலும் எண்கள் இருக்க இயற்றப்படும் செய்யுள் வகை.இப்பாடல் தேர் தட்டு போல் அமையும்.ஒன்று முதல் ஏழு வரை படிப்படியாக கீழிருந்து மேல் பின்பு மேலிருந்து கீழ் என்று தேர் தட்டு மேலே செல்வதும் கீழே செல்வதுமாக அமைந்த அற்புதமான பாடல்.

*யாழ் முரிப்பண்:*

திருநீலகண்ட யாழ்ப்பாணர் தன் யாழில் அடங்காதவாறு ஒரு திருப்பதிகம் இயற்றுமாறு சம்பந்தரை கேட்க அவர்**' மாதர் மடப்பிடியும் '** என்னும் பதிகத்தை பாடினார். அப்பதிகத்திற்குரிய பண் "யாழ்முரிப்பண் "எனப்பட்டது.முரி என்பது ஓர் அடியில் தொடங்கிய யாப்பினையும், இசை நடையையும் அந்த அடியிலே முறிந்து மாற்றி ,மற்றொரு யாப்பியலும் , இசை நடையும் அமையப் பாடப்படுவதாகிய இசைபாட்டாகும்.இதனை முரிவரி என்றும் கூறுவதுண்டு .இதனை பாடுவது மிகவும் கடினமாகும் ஆனால் சம்பந்தர் மிக எளிமையாக "மாதர் மடப்பிடியும்"என்ற பாடலை பாடி அருளியுள்ளார். இந்த 'யாழ்முரிப்பண்' பாடல் கச்சேரிகளில் இசைக்கு ஏற்ப வார்த்தைகளை மீண்டும் மீண்டும் உபயோகித்து பாடப்படுகிறது.அப்பாட்டின் இயல்பினை மாற்றிப் பாடுவதற்கு மரபுசைவர்கள் எதிர்ப்பு தெரிவித்துவந்தனர்.

இவற்றின் மூலம் தமிழின் தனித்துவத்தையும்,சிறப்பையும் இசையின் மூலம் சம்பந்தர் வெளிப்படுத்தி உள்ளார் என அறியலாம். நம்பியாண்டார் நம்பி தொகுத்த திருமுறைகள் பழந்தமிழ் இசையையொட்டிய பண்களுடன் இன்றும் சைவக் கோவில்களிலும்,சைவர்கள் வீடுகளிலும், சமய நிகழ்ச்சிகளிலும் பாடப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது

**நாடகத் தமிழும் சைவ சமயமும்:**

இயலும் இசையும் கலந்து கதையை தழுவி நடித்து காட்டுவது நாடகம் ஆகும். சிறந்த கவிதையின் இலக்கணங்களில் ஒன்று, சிறந்த வரலாற்றில் தொடர்ந்து வரும் செய்தி நாடகப் பாங்கில் அமைதல் வேண்டும் என்பது.அத்தகைய நாடக பாங்கினை சிறிதும் குறை இன்றி சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் அமைத்திருக்கிறார். சேக்கிழார் எழுதிய புராணம் வடமொழியை மூலநூாக கொள்ளாமல் தமிழில் எழுதப்பட்ட முதல் நூலாகும்.பெரியபுராணம் தமிழ்நாட்டின் நான்கு பிரிவுகளான சேர,சோழ,பாண்டிய,பல்லவ நாடுகளுக்கும் உரிய பொது நூலாக விளங்குகிறது.இதனை ஒரு தேசிய

பொது காப்பியம் என்றும் கூறுவர். சேக்கிழார் இயற்றிய இந்நூல் தமிழ்நாடு,தமிழ் இலக்கியம் ஆகிய இரண்டின் வரலாற்று அறிவுக்கும் பெரும் தொண்டு செய்து இருக்கிறது என்பதற்கு இந்நூலின் நாடகப்பண்பு சான்றாகும். இதற்கு சான்றுகளாக, தடுத்தாட்கொண்ட புராணம், மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றில் முத்தநாதன் நீறு பூசி நாடகம் நடித்தது, எறிபத்த நாயனார் வரலாறு, காரைக்கால் அம்மையார் மாங்கனி வரவழைத்துக் காட்டியது போன்றவற்றை கூறலாம்.

சிறு தொண்டர் அமுது படையல் திருவிழா

பெரிய புராணத்திலுள்ள சிறு தொண்டர் புராணத்தில் வரும் திருவிளையாடல் - சிவபெருமான் பைரவ அடியாராக வேடந்தாங்கி திருச்செங்காட்டங்குடியை அடைந்து பிள்ளைக்கறி சமைக்குமாறு சிறு தொண்டரை கேட்க அவர் தன் மகனான சீராளனை படையல் இட்ட நிகழ்வு ,இன்றளவும் ஆலயங்களில் `சிறு தொண்டர் அமுது படையல் திருவிழாவாக` ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. ஏராளமான பக்தர்கள் இத்திருவிழாவில் பங்கேற்று இறைவனை தரிசித்து செல்கின்றனர்.

ஆவணி மூலத் *திருவிழா*

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் ஆவணி மூலத் திருவிழாவின் போது தேவாரத்தில் கூறப்பட்டுள்ள திருவிளையாடல்களான ‘*கருங்குருவிக்கு உபதேசம், நாரைக்கு முக்தி அளித்தல்,மாணிக்கம் விற்றது, தருமிக்கு பொற்கிழி அளித்தல், பாணனுக்கு அங்கம் வெட்டியது, வளையல் விற்றது, நரியை பரி ஆக்கியது, பிட்டுக்கு மண் சுமந்தது* ’ போன்றவை திருவிளையாடல் நிகழ்ச்சிகளாக நடைபெற்று வருகின்றன.

இதன் மூலம் வழிபாடு என்னும் பெயரில் சைவ சமய நூல்களில் கூறப்பட்டுள்ள கதைகள் நாடகமாக ஆலயங்களில் இன்றளவும் நடைபெற்று வருகின்றன என்பதை அறிய முடிகிறது. நாடகத் தமிழின் வளர்ச்சிக்கு சைவ சமய நூல்களின் பங்களிப்பு என்னவென்பதை இதன் மூலம் நாம் நன்கு அறியலாம்.

**ஆதீனங்களும் தமிழும்;-**

சைவ சித்தாந்தத்தை வளர்க்கவும், அதை மக்களிடையே பரப்பவும் தோற்றுவிக்கப்பட்ட மடங்களே ஆதீனம் என்று அழைக்கப்படுகின்றன.இவை சமய பணியாற்றுவதோடு தமிழ் இலக்கிய இலக்கணத்தை போற்றுவதிலும் பெரும் பங்காற்றி வருகிறது. சைவ ஆதீனங்களுள் திருவாவடுதுறை ஆதீனம், தர்மபுரம் ஆதீனம், சூரியனார் கோயில் ஆதீனம், மதுரை ஆதீனம் போன்றவை பலராலும் நன்கு அறியப்பட்ட ஆதீனங்களாக விளங்கி வருகின்றன. தமிழ் வளர்ச்சியில் சைவ ஆதீனங்களின் பங்கு குறித்து ஒரு தனி ஆய்வு கட்டுரையையே எழுதலாம் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையில் சைவ ஆதீனங்களான திருவாவடுதுறை ஆதீனம் மற்றும் தர்மபுர ஆதீனம் தமிழுக்கு ஆற்றிய தொண்டு பற்றி பின்வருமாறு காணலாம்.

*திருவாவடுதுறை ஆதீனம்*

குரு நமச்சிவாயர் என்பவரால் கி.பி.16ஆம் நூற்றாண்டில் இம்மடம் நிறுவப் பெற்றது. இம்மடத்தின் புலவர்களால் இயற்றப் பெற்ற 14 நூல்கள் பண்டார சாத்திரம் என்றழைக்கப்படுகின்றன.ஆதீனத்தின் ஞானக்களஞ்சியமாக விளங்கும் “சரசுவதி பண்டாரம்” எனப்படும் திருமடத்தின் நூலகத்தில் பனை

ஓலைகளில் எழுதப்பட்ட நூல்கள் அருளாளர்களால் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டன. இன்றளவும் மரபு மாறாது அந்த ஓலைச்சுவடிகள் சரசுவதி பண்டாரத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.மேலும் ஓலைச்சுவடிகளை படி எடுப்பதற்கு நிரந்தர பணியாளர்கள் இவ்வாதீனத்தில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் ஓலை சுவடிகளை மட்டுமல்லாமல் நமது தமிழ் இலக்கியங்களையும் இவ்வாதீனம் பாதுகாத்து வருகின்றது என்பதனை நாம் அறியலாம்.மேலும் மடத்தின் தமிழ் பணிகளாக ஆண்டுதோறும் திருமந்திரம் மாநாடு, சிவஞானபோதம் மாநாடு, திருமுறை மாநாடு,அறிய தமிழ் நூல்கள் வெளியீடு, இலவச நூல்கள் அளிப்பு, புலவர்களுக்கு சன்மானம் போன்ற தமிழ் பணிகளையெல்லாம் இந்த திருவாவடுதுறை மடம் செய்து கொண்டிருக்கின்றது .

தருமபுரம் ஆதீனம்

தமிழ் வளர்த்த திருமுறைகளை பேணிக் காப்பதிலும் அதன் வழியே தமிழை வளர்ப்பதிலும் ஆதீனங்கள் பெரும் பங்காற்றுகின்றன. தருமபுர ஆதீனத்தின் கொள்கை வாசகமே **"சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்குக"** என்பதுதான். அதற்கேற்ப தெய்விகத் தமிழ் வளர்ப்பதில் ஆதீனம் பெரும் அக்கறை காட்டுகிறது. மேலும்,ஆதீனச் சிறப்பு விழாவாகிய ஆவணி மூல நாளில் பழுத்த தமிழ்ப்புலமை பாலித்த தமிழறிஞர்க்குச் சிறப்புப் பட்டம் வழங்கி வருவது.திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சைவ சமய நூல்கள் பலவற்றைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.தேவாரப் பாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.ஆதீனக் கோயில்கள் பலவற்றில் நூலகங்கள் அமைத்தும் மாலைநேரத்தில் ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு குழந்தைகட்குத் திருமுறை வகுப்புக்கள் நடத்தியும் உதவுவது.ஆதீனத் திருமடத்தில் பெரியதொரு நூலகம் அமைத்துப் பழைமையான ஓலைச்சுவடிகளையும் நூல்களையும் பேணி வருவது போன்ற பணிகளை மேற்கொண்டு தமிழ் வளர்ச்சிக்கு உதவுகிறது.

**முடிவுரை:**

இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழின் வளர்ச்சியில் சைவ சமயம் மற்றும் சைவ சமய சான்றோர்களின் பங்கு அன்றும் இன்றும் நிலைபெற்று தமிழின் பெருமையை நிலைநாட்டி வருகின்றது. இந்து மதத்தின் உயிர்நாடியாக சைவ சமயம் விளங்குவது போல சைவ சமயத்தின் உயிர்நாடியாக தமிழ் மொழி விளங்குகின்றது. எனவே சைவமும் தமிழும் பின்னிப்பிணைந்த தொடர்பு கொண்டவை என்றே கூறலாம்.தமிழர்கள் சைவ சமயத்தையும் தமிழையும் தமது இரு விழிகளாக போற்றி பாதுகாத்து வருகின்றனர். இதன் மூலம் சைவ சமயமும் செந்தமிழும் வளர்ந்து பொலிவு பெற்று நிற்கின்றன.

**துணை நூற்பட்டியல்:**

1)தமிழ் இலக்கிய வரலாறு, பன்னிரண்டாம் நூற்றாண்டு, பாகம் - 1 ,அருணாசலம், மு.(2005).தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம்.சென்னை.

2)Twal, W. O., Wahlquist, A. E., & Balasubramanian, S. (2016). Yogic breathing when compared to attention control reduces the levels of pro-inflammatory biomarkers in saliva: a pilot randomized controlled trial. BMC complementary and alternative medicine, 16(1), 1-10.

3)கர்நாடக சங்கீதம் தமிழிசை - அருணாசலம், மு.(Aruṇācalam, mu.) (1985).ஜே. வி. பிரிண்டர்ஸ்.தஞ்சாவூர்.

4)தருமை ஆதீனம் இயற்றிவரும் பணிகள்: http://dharmapurammadaalayam.blogspot.com/2012/06/blog-post_14.html?m=1

5) http://www.thevaaram.org/thirumurai_1/nayanmar_view.php?nayan_idField=1

6)சைவ சமயம் டாக்டர் மா. இராசமாணிக்கனார், M. A .L. T., M. O .L., Ph. D. துணைத் தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்,செல்வி பதிப்பகம், காரைக்குடி. (செல்வி – 4) https://shaivam.org/to-know/saiva-samayam-katturai-rasamanikkanar/#gsc.tab=0

7) https://www.tamilvu.org/ta/courses-degree-a041-a0414-html-a041415-8839

8)https://shaivam.org/thirumurai/third-thirumrai/974/thirugnanasambandar-thevaram-thirukkazhumalam-mannil-nallavannam/

9)https://www.valaitamil.com/tamil-and-samayam_6859.html

10) https://deivathamizh.blogspot.com/2018/01/blog-post.html?m=1